Regd. No. M. 4408.] [தனிப் பிரதி 0—1—6.

ஆசிரியர்:- G. தெக்ஷிணாமூர்த்தி பிள்ளை. உதவி ஆசிரியர்:- G. கண்ணுசாமி பிள்ளை.

# "AGASTHIAN."

# அகஸ்தியன்.

மாதாந்தர சித்த வைத்தியத் தமிழ்ப் பத்திரிகை.

நோய்நாடி நோய்முதனாடி யது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

அற்றல் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு — குறள்

மலர் 2. திருத்துறைப்பூண்டி 1942-௵ மே-௴ 1௳ இதழ் 4.

## பொருளடக்கம்.

—:(0):—


| | |
|---|---|
| வாலை | 'பக்தன்' |
| அகஸ்தியர் வரலாறு | S. வைத்தியலிங்கம் செட்டியார் |
| ரஜஸ்வலை | 'நீலாம்பிகை' |
| சித்த வைத்தியம் | அ. சிதம்பர முதலியார் |
| மத நம்பிக்கை | .... ... .... |
| அனுபவ வைத்திய முறைகள் | ஷத்கிரி ஷண்முகானந்தன் |
| உதயசங்கரன் | நாகை என். பாலசுப்ரமண்யம் |
| வைத்திய நூற்கள் | C. K. குமாசாமி பிள்ளை |
| சித்த மருந்துகள் | G. கண்ணுசாமி பிள்ளை |


## "வாலை."

பக்தன்.

1. கள்ளக் கமல விழி சுழல—கன
குறும்புக் கனி மொழிகள் மிழல
மெள்ளக் குலுங்க மணிக் கிளியே—அவள்
மிருது நடை கண்டு வருவாய்!

2. கண்டது தாமதங் கேள் கிளியே—என்
கட்டுமனம் விட்ட தென்ன கிளியே!
விண்டது வாய்மொழியொன் றில்லை—உள்ளம்
உருகும் மொழி ததும்புங் கண்ணில்

3. கண்களுக் கினிமை யடி வஞ்சி—அவள்
கருதச் சுகஞ் சொரியும் நெஞ்சில்
பெண்களுக் கெலா மரசி கிளியே—அவள்
பேரின்பஞ் செய்யுந் திரு வாலை!

4. மந்த மாருத வசந்த காலம்—மதி
மேவி யொளிரு கின்ற நேரம்
மந்த காசம் புரி வாளே—அவள்
மாயம் மறக்கிலனே தோழி!

அகஸ்தியனில் பிரசுரமாகும் கதைகள் கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

# அகஸ்தியர் வரலாறு.

டாக்டர் S. வைத்தியலிங்கம் செட்டியார், R. I. M.

முன் கூறப்பட்ட இருவித சித்தர் தொகைகளைத் தவிர, கர்ணபரம்பரையாகச் சொல்லப்படும் வேறொரு தொகையுமுண்டு. அது வருமாறு:—

1. அகத்தியர்
2. சிவவாக்கியர்*
3. பட்டணத்தார்*
4. பாம்பாட்டீசர்
5. பத்திரகிரி*
6. இடைக்காடர்
7. அகப்பேய்ச்சித்தர்*
8. குதம்பைச்சித்தர்
9. கடுவெளிச்சித்தர்*
10. குருமுனிவர்*
11. அழுகணிச்சித்தர்*
12. நந்தி
13. இராமதேவர்
14. தேவர்*
15. கொங்கணர்
16. உரோமர்
17. திருமூலர்
18. கருவூரார்*

கருவூரார் என்பவர் பிரபல சித்தர். அவருடைய பெயர் மேலிரு தொகையிலும் காணப்படவில்லை. நக்ஷத்திரக் குறியிடப்பெற்ற சித்தர்களை முன்னைய வரிசைகளில் காணப்படவில்லை. 'குருமுனி' என்பவர் போகர் என்னும் சித்தராக இல்லாவிட்டால் அவருக்குச் சரித்திரங் கிடைப்பது அரிது. மற்றெல்லோருடைய பெயரும் இலக்கியங்களிற் காணப்படுகின்றன.

மேற்கண்ட மூன்று வரிசைகளிலும் விடப்பட்ட சில சித்தர்கள் இருக்கின்றனர். யூகிமுனி, புலிப்பாணி, புசுண்டர், காக்கையர், கந்தர், கஞ்சமலைசித்தர், தேரையர், முதலிய அநேக சித்தராவர். பதினெண் சித்தர் என்ற தலையங்கத்தின் கீழ் எல்லாச் சித்தர்களையும் கொள்ளுவதே சிலாக்கியமாய்த் தோன்றுகிறது. 'சித்' ரூபமாக விருக்கின்ற ஒவ்வொரு புருஷனும் சித்தன் என்று கொள்க.

## அகத்தியர் வரலாறு.

அரக்கர் அறுபத்தாறு கோடி. தேவர் முப்பத்து மூன்றுகோடி. இதிலிருந்து அறத்தைவிட மறம் உரம் பெற்றதென்று தோன்றுகிறது. 'தாரகன்' என்பவன் மகா கொடிய அரக்கன். மற்றும்பல அரக்கர்களைக் கொண்டு அவன் தேவர்களுக்கிழைத்த துன்பம் கொஞ்சமன்று. தாரகன் என்ற மாத்திரத்தில் தேவர்கள் கொண்ட நடுக்கம் வர்ணிக்கமுடியாது. துஷ்டனைக்கண்டால் தூர நட என்பதற்கிணங்க எத்தனை நாளைக்குத் தான் நடக்க முடியும்? தேவர்க்கரசனாகிய இந்திரனைப் பலவாறு ஏசினர். "இந்திரன் எனினவன் அரக்கர் ஏயின, சிந்தையிற் சென்னியிற் கொள்ளுஞ் செய்கையான்" என்று வசைதொடுக்கலாயினர். கடைசியில் இவர்களுடைய வேண்டுகோள் இந்திரனுடைய இரண்டு காதுகளையும் கிழித்தது. இந்திரன் திடுக்கிட்டு அக்நியை விளித்து 'அக்நி! நீ போய் தாரகாதி அசுரர்களை வதஞ்செய்து வரக்கடவை' என்று அவனை அனுப்பினன். தழல் அல்லவா? தகித்துவிடுமன்றோ? தாரகாதியர் தழல் முன்நிற்கத் துணியவில்லை. கடலுக்குள் மூழ்கி யொளிந்தனர். தாரகாதியர் தந்திரத்தை அக்கினி அறிந்து கொள்ளாது வாளாவிருந்தான். கடலை வறளச் செய்திருந்தால் அவர்கள் மாண்டிருப்பது நிச்சயமல்லவா? இந்தவிஷயம் இந்திரனுடைய காதுகளுக்கு எட்டிற்று. அக்கினியைச் சினந்து நோக்கி, 'ஓ! அக்நீ! நீ எனது உத்திரவைத் தவிர்ந்தாய். ஆதலின் மண்மீது பிறந்து கடலைக்குடித்து அவ்வசுரரை யழித்து வரக்கடவாய்' என்று சபித்தான். அச்சாபத்தால் பிறந்த அக்நிதான் அகத்தியன்!

விஷ்ணுமூர்த்தி தருமப்பிரஜாபதிக்குப் பிள்ளையாகப் பிறந்து 'கந்தமானம்' என்னும் பருவதத்திற் கனத்த 'தபஸ்' பண்ணிக் கொண்டிருந்தான். ...ருந்தவத்தழல் அமரர் உலகத்தை அனற்றிற்று. அதுகண்ட தேவேந்திரன் 'அப்ஸரஸ்'களை தபசியிடம் அனுப்பி அத்தவத்தைக் கலைத்து வருமாறு ஏவினன். கோர தபசியாகிய நாராயணரிடம் ஸ்திரீரத்தினங்களின் மாயாஜாலங்கள் பலிக்கவில்லை. அன்றியும், அவமானமடைந்து திரும்பிவிட்டனர். ஏன்? அவர் தன் துடையிலிருந்து ஒரு நாரீமணியைச் சிருட்டித்து அனுப்பினர். அவள் ஊருவிலிருந்து உற்பத்தியானமையால் ஊர்வசி என்று பெயர் பெறுவாளாயினள். ஊர்வசி மற்ற தேவதாஸிகளினுடைய பேரழகை யெல்லாம் மங்கும்படிச் செய்யும் ஜோதிவனப்பைப் பெற்றிருந்தாள்.

ஊர்வசியின் அழகைக் கண்ட தேவர்கள் வாயைப் பிளந்தனர். 'மித்திரன்' என்னும் தேவன் அவள்மீது அடங்காத மோகதாபங் கொண்டு, கூடுவதற்கு அழைத்திருந்தான். மித்திரனின் மொழிக்கிணங்கி ஊர்வசி அவன்பால் சென்றுகொண்டிருந்த சமயம், வருணன் என்பவன் அவளைக் கண்டு அவளழகில் ஈடுபட்டு நின்றான். மோகத்தீயினுல் உந்தப்பட்ட வருணன் அவளைப் புணர்தற்கழைக்க, "முன்னேயே மித்திரனுக்குப் பெண்படுவதாக வாக்குக் கொடுத்துவிட்டேனே! ஒருவர் மனைவியை ஒருவர் புணர்தல் தகுதியோ?" என்று ஊர்வசி கூறலும், "ஆனல் நீ கூடுங்காலத்தில் என்னை நினைந்திருக்க முடியுமா" என்று வருணன் வினவினன். அதற்குடன்பட்டுப் பிரிந்து சென்று, மித்திரனுடன் கூடியிருக்கும்போது வருணனையே நினைந்திருந்தாள். அதையுணர்ந்த மித்திரன் 'மக்கள் பிறப்பெய்துக' என்று அவளைச் சபித்து அனுப்பிவிட்டான். மித்திரன் தனது சுக்கிலத்தையொரு கடத்தில் விட்டுவைத்தான். வருணனும் தன் சுக்கிலத்தை ஒரு கும்பத்தில் விட்டுவைத்திருந்தான். அவ்விரு கும்பத்திலுமிருந்த சுக்கிலத்தால்* அக்கினி பகவான் அகத்தியன் எனத் தோன்றினன். இதனல், அகத்தியன் என்பவர் அஷ்டதிக்குப் பாலரில் ஒருவரின் அவதாரம் என்று விளங்குகின்றது. பிறகு அகத்தியன் கடனீரைக் குடித்து தாரகாதியரைக் கொன்றுவிடுகின்றாரென்பது பெறப்படுகின்றது. அன்றியும்,

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)

---

*சமீபத்தில் சுக்கில சுரோணிதத்தை கண்ணாடிப் பாத்திரத்திலிட்டுப் போஷித்து வருவதால், பத்து மாதத்தில் ஒரு குழந்தையைச் செனிக்கச் செய்யலாமென்று மேனாட்டு நிபுணர்கள் கூறுவதையும், முயல்வதையும், இன்று நாம் பத்திரிகை மூலமாக அறிகின்றோம்.

# “அகஸ்தியன்.”

மாதம் ஒருமுறை வெளிவரும் ஓர் உயரிய வெளியீடு.

தாய் மொழித் தமிழை ஆய்வுற வின்பம். சித்த வைத்தியத்தை நத்துதலின்பம்.

மலர் 2. | திருத்துறைப்பூண்டி 1942-ஞ மே-மீ 1உ | இதழ் 4.


பெண்ணுலகம்.

## ரஜஸ்வலை.

### கடிதம் 6.

அருமைக் கமலத்துக்கு ஆசீர்வாதம். உபயக்ஷேமம். க்ஷேமத்துக்கு எழுதவும்.

‘அமெனோரியா’ என்னும் சூதகத் தடை யுண்டாவதற்கு உணர்ச்சிகளின் உத்வேகமும் காரணம் என்று முன்னே 4-வது கடிதத்தில் எழுதியிருந்தேன். அதே விஷயத்தில் சில குறிப்புகளைச் சொல்லுகிறேன் கேள். பிள்ளை பெற்ற பிறகு ‘பால் காலம்’ என்று சொல்லுவார்கள். அந்தப் பால் காலத்தில் சூதகத்தடையிருந்தால் அது அமெனோரியாவைச் சேர்ந்ததல்ல. சூதகத் தடைக்குப் பல காரணங்களுண்டு. கர்ப்பப்பை இல்லாமல் போனாலும், நாதப்பை இல்லாமல்போனாலும் பெண்களுக்கு ருதுவே ஏற்படாது. இக்கருவிகள் வளர்ச்சியடையாமலிருந்தாலும் ருதுவுண்டாகாது. இவை ருதுவைப்பற்றிய விஷயம்

ருதுவாகாமலிருக்கிற பெண்களுக்கு ருதுவேற்படாம விருப்பதால் இதர தொந்திரவுகள் உண்டானாலும் உண்டாகலாம். உண்டாகாமலிருந்தாலும் இருக்கலாம். ஆனால், மாதாந்தர சூதகம் திடீரென்று அற்றுப்போகிற பேர்வழிகளுக்கு நாதப்பை(Ovaries) இடைவிடாமல் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறபடியால், கர்ப்பாசயத்தினிடமாக மிகவும் கடினமான வலியுண்டாகி, சூதகம் விழ முடியாமல் தடைப்படுகிறது. கர்ப்பாசயத்திலும் (Uterus) நாதப்பைகளிலும் (Ovaries) மாமிச பலமற்ற பெண்களுக்கு அறவே சூதகம் நின்று போனாலும் இதர தொந்திரவுகள் ஏற்படுவதில்லை. ஆகவே, வலியிருந்தாலும் இல்லாவிட்டாலும் சூதகம் நின்றுபோவது ஒரு சீக்கு என்று மட்டும் தெளிவாகிறது. நாதப்பை பலஹீனமடைந்தால் காமவுணர்ச்சியும் குறைந்து போகும் என்று தோன்றுகிறது.

‘தைராய்ட்’ (Thyroid) என்னும் தொண்டையிலுள்ள உறுப்பு நலிந்து போனாலும் சூதகத்தடை ஏற்படலாகும். நாதப்பைகள் நாதத்தை உற்பத்தி செய்வதுடன் மற்றொரு முக்கியமான வஸ்துவையும் உற்பத்தி செய்கிறது. அந்த வஸ்துவுக்கு லிம்பாடிக் ஸ்ட்ரீம் (Lymphatic Stream) என்று பெயர். ‘அகக்கசிவு’ (Internal Secretion) என்றும் சொல்லப்படும். இது நிறத்தில் வெண்மையாயிருக்கும் ஒரு திரவ பதார்த்தம். இது தமிழில் வெள்ளைநீர் என்று சொல்லப்படுகிறது.

நாடியும் நாளமும் நவிலிள வெலும்பும்
வேள்ளை நீரும் வெள்ளிய பற்களும்
தலைமயிர் நகமும் தந்தையின் கூறும்.

என்றபடி வெள்ளைநீர் சிவத்தின் கூறு என்று தெரிந்து கொள்ளவேண்டும். இந்த வெண்ணீருதான் பெண்களின் காமவுணர்ச்சிக்கு முக்கிய காரணம். கலவிக்கு முன்னேற்பாடாக ‘ஓவா’ என்னும் நாதப்பை இந்த வெள்ளை நீரைச் சொரிகிறது. கலவியின்போது இதே பை நாதம் என்னும் சுரோணிதத்தையும் சொரிகிறது. இதனால், ‘ஓவாவின்’ முக்கியத்துவம் நன்றாக விளங்குகிறதல்லவா?

‘தைராய்ட்’ என்பதைத் தமிழில் விசுத்தி (கண்டம்) என்று சொல்லலாம். ‘பிட்யூட்டரி’ (Pituitary) என்னும் கருவி கண்களுக்கும் மூக்கிற்கும் மையத்தில் அமைந்திருக்கிறது. சித்தர்கள் இக்கருவியைப் பல பரிபாஷை வார்த்தைகளைக் கொண்டு குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்விடம் திரிபுரை, அமுதமண்டலம் என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறது. இத்தகைய தையாராய்டுக்கும் பிட்யூட்டரிக்கும் ஓவா வென்னும் நாதப் பைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. கண்டத்திலிருக்கிற தைராய்ட் நோய்ப்படினும் அல்லது மூக்கிற்கு மேலிருக்கும் பிட்யூட்டரி கெட்டுப் போயினும் நாதப்பையும் தன் வேலையைச் செய்ய முடியாமல் போகிறது. எனவே தைராய்ட், பிட்யூட்டரி என்னும் கருவிகள் சரியாக வேலை செய்யாவிட்டால் நாதப்பை கெட்டுப்போய் அமெனோரியா என்னும் நோய் ஏற்படும் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

க்ஷயரோகம் மலேரியா முதலிய இதர நோய்களாலும் அமெனோரியா உண்டாகலாம். இந்நோய்க்குப் பலவித மருந்துகளிருக்கின்றன. இருந்தாலும் ‘அகஸ்தியன்’ ஆபீஸில் தயாரிக்கப்படும் ‘ரஜஸ் ரக்ஷா’ என்னும் மருந்து இந்நோய்க்குக் கைகண்டதாக விளங்குகிறது.. மற்றவை பின்னால்.

உனதன்[illegible]புள்ள, ‘நீலாம்பிகை.’

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

பண்டவுணர் மூழ்கினர்படார்
கள்ளென வானோர்
எண்டவ வெமக்கருள்கெனக்
குறை யிரந்தார்
கண்டொருகை வாரினன்
முகந்து கடலெலாம்
உண்டபின் னவர்களுமிழ்க
வென்றனு மூமிழ்ந்தான்.

என்று கூறும் கம்பர் கவியும் விளக்காநிற்கும்.

# சித்த வைத்தியம்.

துடிசைக்கிழார் அ. சிதம்பர முதலியார்

### தமிழ்நாட்டுச் சித்தர் சங்கத்தில் சேர்ந்த பதினெண் சித்தர்கள்.

1. அகத்தியர்*†o
2. தேரையர்*
3. புலத்தியர்*
4. புசுண்டர்*
5. மகா உரோமமுனி†*
6. நந்தி†o*
7. திருமூலர்†o*
8. கருவூரார்o
9. தன்வந்திரிo*
10. காலாங்கர்*
11. கஞ்சமலையார்
12. போகர்†o*
13. கொங்கணர்†o*
14. புலிப்பாணி*
15. சட்டைமுனி†o*
16. மச்சமுனி†o*
17. இடைக்காடர்†o*
18. பாம்பாட்டி
19. கோரக்கர்†*
20. கமலமுனி†o*
21. தருமசவுமியர்
22. யூகிமுனி
23. புண்ணாக்கீசர்†*
24. அகப்பேய்
25. குதம்பேய்
26. சிவ வாக்கியர்
27. சுந்தரானந்தர்†o
28. பிரமமுனி
39. வராகமுனி†
30. கூர்மமுனி†
31. கைலாசநாதர்
32. கூன்கண்ணர்†
33. அழுகணி
34. கடுவெளி
35. இராமதேவர்o
36. வான்மீகர்o

குறிப்பு:- (1) ஒருசாரார் கூறியபடி * இக்குறியிட்டவரை நோக்குக. (2) அபிதான சிந்தாமணியார் கூற்றுப்படி † இக் குறியிட்டாரை நோக்குக. (3) பழம் பாட்டின்படி o இக் குறியிட்டவர்களையும் பார்க்க.

ஆதிகாலத்திலே தில்லையில்
[1]திருமூலர் அழகர்மலை [2]இராம தேவர்
அன்புட னனந்தசே னத்திலே
[3]கும்பமுனி அருணையில் [4]இடைக்கா
டராம்
வாதவைத் தீசுரன் கோவில்
[5]தன்வந்திரி [6]வான்மீகர் எட்டுக்
குடியாம்
பாதசெங் கழுநீர் ஆரூரில்
[7]கமலமுனி பழனியில் போக [8]நாதர்
சோதிரா மேச்சுரம் [9]திகழ்நந்தி
தேவராம் சீரங்கம் [10]சட்டைமுனி
யாம்
சொல்லுபரங் குன்றினில்
[11]மச்சமுனி சோலைசெங் திருப்பதியில்
[12]கொங்கணவராம்
இதம்புரியும் தணிகையில்
[13]கருவூரார் எழில்பெருகு மதுரையில்
[14]சுந்தரானந்தர்
இவ்வாறு தோன்றியே சமாது
கள் யோகமாய் இலங்கினர்கள் பதி
னெண்மர் தான்.

இந்தப் பழம்பாட்டில் 14 பேர்களைத்தான் கூறப்பட்டிருக்கிறது. இப்பாட்டில் அவரவர்கள் சமாதுகொண்ட இடங்களைக் குறிப்பிட்டிருக்கிறது.

போகர், புலிப்பாணி இருவரும் வைகாவூர் (பழனி) சதுரகிரி—சிவகிரி முதலிய இடங்களில் வசித்தவர்.

கொங்கணவர்:— ஊதியூர் மலையில் வசித்தார். இதற்கு கொங்கணகிரி என்று பெயர்.

பாம்பாட்டி சித்தர்:— பாண்டி நாட்டின் சட்டைமுனிபால் தீக்கை பெற்றவர் கொங்குநாட்டு மருதமலையில் சமாது.

சித்தர் சங்கத்தை உண்டு செய்து, அதற்கு முதல் முதல் தலைமை வகித்து, சித்தர்முறையை உலகில் பரவ விட்டதற்கு அகத்தியரே காரணம். அகத்தியரே சித்த வைத்தியத்தின் மூலவேர் ஆவர். அவர் இமயமலையின் கண் கயிலையில் இருக்கும் சீகண்ட பரமசிவத்திடத்து மருத்துவ முறையை நேரே கேட்டவர். அவர் காலத்தில் 18 சித்தர்களில் புலத்தியர்—நந்தி தேரையர் இவர்கள் பெயர்களே தெரிகின்றன. மீதியுள்ள 14 பெயர்கள் அறியக் கூடவில்லை. அகத்தியர் செய்த சித்தநூல்கள் ஒன்றும் இப்போது கிடைக்கவில்லை. அவர் பெயரால் இப்போது கிடைக்கும் நூல்கள் பிற்காலத்து அகத்தியப் பெயரை உடைய பலர் செய்தன ஆகும்.

அமுதகலைதேன்—நோயின்சாரம்
வைத்தியக்கும்மி—வைத்தியசாரம்
சங்குசுத்தி—செந்தூரமுறை
அவிழ்தசாரம்—பூரணசூத்திரம்
பஞ்சகாவியநிகண்டு—பஞ்சபட்சி
சாஸ்திரம்

அகத்தியர் பெயரால் உலாவுகின்றன.

இனி, திருமூலர் காலத்தில் இருந்த சித்தர்கள் காலாங்கர், கஞ்சமலையார் முதலிய எழுவர், தன்வந்திரி வான்மீகர், இராமதேவர், கும்பமுனி முதலியோர் ஆவர்.

இனி, காலாங்கர் உடைய மாணாக்கர் போகர். அவருடைய சீடர்கள் கொங்கணவர், புலிப்பாணி, சட்டைமுனி, மச்சமுனி, சுந்தரானந்தர், நந்தீசர் (இவர் அகத்தியருடன் இருந்த நந்தி அல்ல) முதலியோர்.

இனி போகரை அடுத்து சித்தர் சங்கததைத் திகழ வைத்தார். கொங்கணவர் மாணாக்கர் இடைக்காடர் அவர் மாணாக்கர் கமலமுனி, சட்டைமுனியின் மாணாக்கர் பாம்பாட்டிசித்தர், புசுண்டர், உரோமமுனி, மச்சமுனி மாணாக்கர் கோரக்கர், புண்ணாக்கீசர், யூகிமுனி முதலியோர் ஆவர்.

இவர்களை அடுத்து வந்தவர்கள் அகப்பேய், குதம்பேய், சிவவாக்கியர் பிரமமுனி, வராகமுனி, கூர்மமுனி, அழுகணி, கடுவெளி, கம்பளச்சட்டை கைலாயச்சித்தர், கூன்கண்ணர் முதலியோர்.

தமிழ் மூவாயிரத்தில் கூறியுள்ளபடி
"மூலன் உரை செய்த
முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த
முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த
மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த
மூன்றும் ஒன்றுமே"

திருமூலர் இம்மூன்று நூல்களை செய்துள்ளார். அதுவும் மூலன் தேகத்தில் நுழைவதற்கு முன் செய்

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.)



# மத நம்பிக்கை.

இந்த இருபதாம் நூற்றாண்டில் ஜனங்களுக்கு மதத்தின் பேரிலுள்ள நம்பிக்கையை பிரசாரத்தின் மூலியமாய் குறைத்து வந்திருக்கிறார்கள். மத நம்பிக்கை குறையக் குறைய குடும்பத்திலும் ஜாதியிலும் தேசத்திலும், உலகத்திலும் அமைதிக் குறைவும் சந்தோஷக் குறைவும் ஏற்பட்டு வருகிறது. உலகத்தில் பல மதங்கள் நிலவியிருந்த போதிலும் இந்து மதம், கிறிஸ்துவ மதம், இஸ்லாம் மதம் என்ற மூன்று மதங்களும் மிகப் பிரபல்யமாகப் பரவியிருக்கின்றன. தற்காலம் எந்த மதத்தினருக்கும் தம் மதக் கொள்கைகளில் விஸ்வாசம் இருப்பதாகத் தெரியவில்லை. உலகத்தின் இயல்பை தீரத்தெளிய ஆராய்ந்து சிந்தனை செய்யாத சிலர் மதங்களுக்கு எதிராய்ப் பிரசாரம் செய்து அநாகரிகமான நிலைமையை உண்டு பண்ணிவிட்டனர். இந்நிலை சமாளிக்க முடியாத பெரிய துயரத்தை விளைவித்திருக்கிறது.

மதக் கொள்கைகள் நாம் பிறந்த ஒன்றுவது நாளிலிருந்து குடும்பத்தின் தலைவர்களால் போதிக்கப்படும் கல்வியாகும். வீட்டில் பாலியப் பருவத்தில் உபதேசிக்கப்படும் கல்வியே பரந்த தேசத்தின் அமைதிக்கு அஸ்திவாரமாக இருந்து வந்திருக்கிறது. பரம்பரையாக நடந்துவரும் ஒழுக்கத்தைப் பின்னுள்ள சந்ததியார்கள் கடைப்பிடித்து நடக்கும் தர்மமே மதங்களின் அஸ்திவாரமாகும். எழுத்தறிவைக்காட்டிலும் ஒழுக்கக் கல்வியே சமூகத்திற்கு உயிர்போல் விளங்குகிறது. இந்த உண்மையை முன்னிட்டுத்தான், திருவள்ளுவர் கல்வியைப் பொருட்பாலிலும் ஒழுக்கத்தை அறத்துப்பாலிலும் அமைத்திருக்கிறார் என்பதைக் கண்டுகொள்க.

பொறாமை, பேராசை, கோபம், புறம்பேசுவது என்னும் நான்கும் இவ்வுலகத்தைப் பலவிதமான சிக்கலுக்குள் உட்படுத்திக் கலக்கி வருகின்றன. இந்த உணர்ச்சிகளை அடக்கியாளும் சக்தியை நல்குவதே நல்லொழுக்கம்.

அழுக்காறு அவா வெகுளி
இன்னாச்சொல் இந்நான்கும்
இழுக்காய் இயன்றது அறம்.

என்றார் வள்ளுவர். அழுக்காறு என்பது பொறாமை, அவாவென்பது பேராசை, வெகுளி யென்பது கோபம், இன்னாச்சொல்லாவது கடுமொழி; இந்த நான்கையும் குற்றமுள்ளவையென்று தள்ளி நடப்பதே தர்மம் என்பது பொருள். இந்த ஒழுக்கம் குடும்ப தர்மத்திற்காக உபதேசிக்கப்பட்டது. குடும்ப தர்மத்தைச் சரிவர நடத்தக்கூடியவர்களே பெரிய தேசத்தைச் சரியாய் நடத்தக்கூடும். இளமையிலிருந்து நல்லொழுக்கத்திற் பயின்று உயர்ந்து வந்தவர்களே பொது மக்களுக்கு நன்மை செய்யக்கூடும். இளமையிலிருந்து துர்ப்பழக்கங்களிலீடுபட்டு தீமை செய்வதில் விருப்பமுடையவர் கிராமாதிகாரியாக வந்தாலும் சரி, நகர அதிகாரியாய் வந்தபோதிலும் சரி, மந்திரியாக அமைந்தபோதிலும் சரி, அல்லது ஹிட்லரைப்போல சகல பலமுமுள்ள சர்வாதிகாரியாக வந்தபோதிலும் சரி, தம்முடைய இயற்கைக் குணத்தை மாற்றிக்கொள்ள முடியாது.

எனவே, மழலை மொழிக் குழந்தைப் பிராயத்திலிருந்து ஒரு தேசத்தில் சகல ஜனங்களுக்கும் நல்லொழுக்க உபதேசம் செய்யப்படின், பள்ளிக்கூடத்தில் மாணவர் கடமைகளும் ஆசிரியர் கடமைகளும் செவ்வினின் நிறைவேற்றப்படும். அறிவு முதிர்ந்த பின் யார் யார் எந்தக் கர்மத்தில் ஈடுபடுகிறார்களோ அவரவர் தத்தம் கடமைகளில் சிறிதும் வழுவாமல் சத்தியவந்தராக நடப்பதற்கு சாத்தியமாகும். குறைந்தபக்ஷம் பாமர மக்களாவது மதத்தில் நம்பிக்கை கொண்டு, நல்லொழுக்கத்தைப் பின்பற்றி நடவாமலிருந்தால் தேசம் உருக்குலைந்து சண்டைக்கும் சச்சரவுக்கும் உள்ளாகி என்றென்றும் சாஸ்வதமான அல்லலை அனுபவிக்கும்படியிருக்கும்.

மதத்தின் பரம்பரை ஒழுக்கத்தையின்றி வெறும் அரசியல் சட்டத்தால் மட்டும் தேசத்தை ஆண்டுவிட முடியுமென்று நம்புவது வீண் மனோராஜ்யமாகும். 'வாங்கின கடனைக் கொடுத்துவிடுவது தன் கடமை' என்னும் பரம்பரை ஒழுக்கம் மனதில் பதியாத ஒருவனை சட்டத்தைக் கொண்டு ஒன்றும் செய்வதற்கில்லை. அப்படிச் செய்தாலும் அவன் ஆத்திரங் கொண்டு எதிரிக்கு அடாத காரியங்களைச் செய்ய முயலுகிறான். 'மோசம் செய்வது நியாயம்' என்று நினைக்கும் அளவுக்கு பாமர மக்களின் நிலை வந்துவிட்டால் சட்டத்தைக் கொண்டு என்ன செய்யமுடியும்? மதச் சட்டத்தினால் ஒரு உள் ஆட்சி நடைபெற்றாலொழிய அரசியல் சரியான காரியங்களை இயற்றுவதற்கு ஏலாது.

மேற்கண்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு நம் முன்னோர்கள் பல மடங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள். மடாதிபதிகள் அனைவரும் இலக்கியங்களையும், வேத பாடங்களையும், கலைகளையும் வளர்ப்பதில் கவனம் செலுத்துவதோடு கிராமந்தோறும் மதத்தில் நம்பிக்கை யுண்டாகும்படியாக அரிய பெரிய பிரசாரகர்களைக் கொண்டு பிரசாரம் செய்ய வேண்டுவது மிகவும் அத்யாவசியமாகும்.

நமது ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளும், தருமபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை முதலிய ஆதீனகர்த்தர்களும் இன்று நம் மதம் எய்தியிருக்கும் நிலைமையைமாற்றி தர்மம் செழித்தோங்கும்படியாக தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று பெரிதும் நம்புகிறோம்.

# அனுபவ வைத்திய முறைகள்.

## சிவராஜயோகம்.

(1) கன்னிகையின் நாத மிங்கே கசிந்துடல் பாயும் போது
தன்னீரே தள்ளிக் கொள்ளத் தமர்திறந் தோடுஞ் சாரை
வென்னீரே சாரை மார்க்கம் வெளியொளி ஒடுக்க மாகும்
பன்னீரே பரவும் போது பசியறப் பார்க்க லாகும்.

(2) பார்க்கவோ கடிமை மெத்த பரவித்தாள் பற்றி வேகும்
ஏற்குமோ கடிமை மேலே ஏறுகின்ற ஏற்றங் கண்டால்
சேர்க்கவோ மவுனமாகும் சேயிழையாள் போக மாகும்
யார்க்குமே உரைத்தி டாதே ஆயிழையாள் போக மாச்சு.

(3) போகமே ஓராண் டுக்குள் பொன்னிறத்தின் மேனி காட்டும்
காகமே சொன்ன நூலால் கருத்தினிலே இருத்திக் கண்டேன்
பாகமே யறிந்த பேர்கள் பக்குவத்தை யறிந்து கொள்ள
சோகமே யில்லை சொன்னேன் சொல்குறிது குறித்து நில்லு.

(4) நிற்கவோ சையோ கத்தில் நிமிஷத்தில் சுழினை சேரும்
மர்க்கடம் போல தாக மதிகெட்டு அலைந்தி டாமல்
தற்குறி யாலே கண்டு தனிமையிற் றூங்கும் போது
பொற்குறி யுள்ள மாதின் பொறிபுலன் ஒடுக்கந் தானே.

(5) பொறிபுல னொடுக்கத் தாலே போகத்துள் சமாதி நிஷ்டை
அறிவதும் மூலன் சொல்லும் ஒருமூன்று ஆயி ரத்தில்
விரிந்தது யோனி யாகி விழுந்தது லிங்க மென்றும்
அறிந்தவர் அறிவி னுள்ளே ஆனந்த மடைய லாச்சு.

(6) அடையலாம் சக்தி யென்னும் அணிமகுடக் குன்றில் நின்று
தடையறப் பாலை யுண்டு தன்னைத்தான் அறிந்து நோக்கி
விடையதின் பாக னாகி வில்வளையின் றம்பு பூட்டி
மடைதிறந் தருவி பாய மாயமாய் வந்தாள் சக்தி.

## காயகல்ப முறை.

ஒரு பலம் சாதி லிங்கத்தை ஒரு கட்டியாக எடுத்து மருதோன்றி யிலையைத் தேங்காய்ப் பிரமாணம் அரைத்துக் கவசம் செய்து மூன்று நாள் ரவியில் உணர்த்தி சீலைமண் ஏழு செய்து 30 எருவில் புடம் வைத்து எடுத்துக் கொள்ளவும். மேல்கண்ட செந்தூரம் அரிசி யெடை தேன் நெய் திரிகடுகு சூரணம், திரிபலாதி சூரணம் இவைகளில் வியாதிக்கு தகுந்தவாறு உபயோகித்து வர, பித்த வாட்சி, பித்த காங்கை, பித்தசுரம், பித்தவாயு, விக்கல், மூல வாயு, மூல அலர்ச்சி, சுரம், சன்னி, முதலிய. வியாதிகளைக் கண்டித்து சரீர கிடகாத்திரத்தை உண்டுபண்ணும். குழந்தைகள் முதல் பிரயோகம் செய்து அனுபவிக்கப்பட்டது.

சத்கிரி ஷண்முகானந்தன்,
புதுவயல்.

## குன்மம் நீங்க

வேதாரண்யம் கல்லுப்பு ஒருசேர் திறுத்து தண்ணீரில் கரைத்துத் தெளிவிறுத்துக் காய்ச்சி யெடுத்துக் கொள்ளவும். மேற்படி காய்ச்சிய உப்பை பச்சை மஞ்சள் சாற்றை விட்டு நான்கு சாமம் அரைத்து, வில்லைதட்டி யுலர்த்தி 10 எருவில் புடமிட்டு அத்துடன் $3\frac{1}{2}$ பலம் ரசமும், 1 விராகனிடை வீரமும் சேர்த்து முன்சொல்லிய மஞ்சள் சாற்றைவிட்டு அரைத்து வில்லை தட்டி யுணர்த்தி முன்போல் இரண்டு மூன்று புடமிட்டுக் கொள்ளவும். பிறகு வரிக்கும்மட்டிச் சாற்றால் ஒரு புடம் போடவும். மேற்படி சாற்றால் நன்றாய் அரைத்து குன்றிமாத்திரை செய்து உலர்த்தி காலை மாலை 1 மாத்திரை வெந்நீரோடு விழுங்கினால் குன்ம நோய் வயிற்றுவலி நீங்கும்.

## வீர ரசம்.

நல்லமுறையில் சுத்திசெய்த வீரம் பலம் $\frac{1}{2}$, லிங்கத்தில் எடுத்த ரசம் பலம் 1, இவை இரண்டையும் தாய்ப் பால் அல்லது கும்பிடு கிளிஞ்சியிலிருந்த ஊன் நீரை விட்டரைத்து, மூன்று முறை யுலர்த்தி எடுத்துக்கொள்ளவும். பாண்டுவாத்திய ஜாலர்போன்ற பரவலான இரண்டு மண் கலங்கள் செய்துகொள்க. மேற்படி மண் கலத்தின் மத்தியில் எலுமிச்சம்பழத்தின் ஒரு பாதி அடங்கும்படியான ஆழத்திற்கு ஒரு பள்ளம் செய்துகொள்க. இந்தக் கலங்கள் சூளையிலிட்டுச் சுடப்பட்டபின் ஒன்றோடொன்று பொருதுவதினால் மேடு பள்ளமில்லாமல் தேய்த்து சமப்படுத்திக் கொள்ளவேண்டும். பிறகு ஒரு பாதியிலுள்ள ஒரு பள்ளத்தில் மேற்படி ரச—வீரப்பவுடரை கிரப்பி அகலினால் மூடி விளிம்பில் சீலை மண் வலிதாய்ச் சுற்றிக் காயவைத்து, காற்றில்லாத பக்கத்தில் 6, 8 விராற்கிடை உயரம் அடுப்புசெய்து, அடுப்பின் மத்தியில் மருந்துள்ளபாகம் தங்கும்படிச் செய்து ஆமணக்கெண்ணெயை ஒரு அகலிலிட்டு விரல் பருமன் திரிபோட்டு கொளுத்தி எரியவிடவும். அடியில் பிடிக்கும் கரியை அடிக்கடி சிலாகையால் தள்ளிவிடவும். 12 சாமத்துக்குக் குறையாமல் எரித்து பின்பு அடிப்புறம் மேல்புறமாகப் புரட்டிவைத்து முன்போல் 12 சாமம் எரித்து எடுத்து ஆறவிட்டு கரிபடாமல் துடைத்து மருந்தை சாக்கிரதையாய் எடுத்து பச்சை அல்லது நீல சீசாவில் வைத்துக்கொண்டு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ அரிசியெடை தேன், நெய், மெழுகுகள், பனைவெல்லம் முதலிய அனுபானங்களில் கொடுக்கலாம். 3 முதல் 7 வேளை கொடுத்தால் எப்படிப்பட்ட நோய்களையும் நிவர்த்தி செய்கிறது. இதன் பெருமையை அளவிட்டுச் சொல்வது அரிது. இவை எமது அனுபவமாகும்.

K. சுந்தரத்தம்மாள் R. I. M.
திருவாரூர்.

தொடர் கதை

# உதயசங்கரன்
அல்லது
# அமராவதி இளவரசன்.

நாகை என். பாலசுப்ரமண்யம்.

பதிப்புரிமை கதாசிரியனுடையது.
(Copyright to the Author of this Novel)

## 6. காதல் பைத்தியம்.

**பா**னுமதி நீரோடையை நோக்கி விரைந்து சென்று நீர்முகந்து வந்தாள். உதயசங்கரரின் கண்கள் மேலே செருகப்பெற்று, அலங்கோலமாக வீழ்ந்து கிடப்பதைக் கண்டு மனம் பதைத்தவளாக தண்ணீரை முகத்தில் தெளித்துத் துடைத்து கொஞ்சம் பருகும்படியும் செய்தாள். மிகுந்த ஆர்வத்துடன் இளவரசர் நீரைப்பருகினார். முகத்தில் சிறிது பிரகாசம் தோன்றியது; கண்களை விழித்துப் பார்த்தார். அன்புததும்ப நீண்டு நோக்கினார். பிறகு ஈனசுரத்தில், "இதென்ன ஜலமா அமிர்தபானமா? சொல்லமாட்டாயா?" என்று பானுமதியை வினவினார்.

"பிரபு, இது நிஜமான நிகழ்ச்சியா? நான் பானுமதி—தங்கள் அடிமை! கொஞ்சம் கண்களை விழித்துப் பாருங்கள்!" என்று கெஞ்சினாள்.

"தெரியாமலா போயிற்று!"

"ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்! எழுந்திருங்கள்! வீட்டுக்குப் போய் சிறிதுநேரம் களைப்பாறலாம்!"

"இந்த மணலில் படுத்திருப்பது ரொம்ப ஆனந்தமாயிருக்கிறதே, ஏன் எழுந்திருக்கச் சொல்லுகிறாய்?"

"நான் போகவேண்டுமே, வேலையிருக்கிறது!"

"வாயைத் திறப்பதற்கே பயமாய் இருக்கிறதே, நீ என்ன சொல்லப் போகிறாயோ!" என்று சொல்லிக் கொண்டு மெதுவாக எழுந்து உட்கார்ந்தார், இளவரசர்.

"எஜமானே, என்ன ஜன்னி மேலிட்டவர்போலப் பேசுகிறீர்கள்!" என்று பயந்தவளாகக் கேட்டாள்.

"ஜன்னிதான்! அது குறைவதும் கூடுவதும் உன் பதிலைப் பொறுத்திருக்கிறது. பானு என்ன செய்யச்சொல்லுகிறாய்? என் மனம் உன்னிடம் லயமாகி விட்டது!"

"ஹா! இதென்ன அடாத வார்த்தைகள்!"

"ஆம் இனி எனக்கு என்ன சுதந்தரம்? உன்னுடைய காவல் கைதிதான்!"

"என் காதில் போடவேண்டாம்" என்று இரு காதுகளையும் கெட்டியாகப் பொத்திக் கொண்டாள்.

"இந்த வார்த்தைகள் அவ்வளவு கொடுமையாகவா இருக்கின்றன!" என்று இரக்கம் ததும்பும்படி கேட்டார் இளவரசர். பானுமதி ஒன்றும் சொல்ல முடியாமல் கண்களைக் கசக்கினாள்.

"இன்னும் உனக்கு பாஷை புரியவில்லையா?"

"ஹா! விட்டுவிடுங்கள், பிரபு நான் ஏழை!"

"அடி பானுமதி! இது உலகத்தில்லாத சதி! நீ சொல்லுவது பதிலல்ல!" என்று உதயசங்கரர் ஆத்திரப்பட்டார்.

"ஆம் அடிமை ஸ்தானத்திலிருந்து நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத்தில் எனக்கு வரையறுத்திருக்கும் இடத்தில் என்னை விட்டுவிடுங்கள். என் ஜீவியத்தில் மாசு மறுவில்லாமல் காப்பாற்ற வேண்டியது தங்கள் கடமை!" என்று கண்ணீர் உகுத்தாள்.

"பானு! நீ எவ்வளவு சூடாகப் பேசினும் என்னைத் தாக்கி வருத்த முடியாதபடி எனது நெஞ்சில் அவ்வளவு பிரேமை நிறைந்திருக்கிறது. என் ஹிருதயத்தை வேணுமானால் சோதனை செய்துபார்!"

தனது நிலைமை வரவர மோசமாகி வருவதைக் காண பானுமதிக்கு அடங்காத வருத்தம் உண்டாயிற்று. இளவரசரின் துன்மதியை நினைத்து அவர்மீது கோபங் கொண்டாள். கோபித்து என்ன ஆகும்? பெரிய ஜமீன்தாராயிற்றே, அவரை அவள் என்ன செய்ய முடியும்? யோசனை புரியாமல் ஸ்தம்பித்து நின்றாள்.

"யோசனை பலமாகத் தோன்றுகிறதே!" என்று சொல்லிக்கொண்டு அவள் சமீபமாக நெருங்கிவந்தார் உதயசங்கரர். பானுமதி ஒரு தப்படி பின்வாங்கிச் சென்றாள்.

"நன்றாக இருக்கிறது காரியம்! தேனுண்ட வண்டுகள்போல உன்மத்தம் பிடித்தவராய் பெண்களைச் சுற்றிச் சுற்றி வலம் வருவது தனவந்தர்களின் வழக்கம். பிரபு, செல்வம் நிறைந்தவர்களுக்கு பொறுப்பும் கடமைகளும் அதிகமல்லவா? அத்தகைய பொறுப்புகளையும் கடமைகளையும் தவறும்போது எத்தனை ஏழை மக்கள் வாழ்வின் லக்ஷியத்தை இழக்கவேண்டியதாகிறது. என் போன்ற எளியவருக்கெல்லாம் தயாபரனாக விளங்கும் தாங்கள் ஏழை அநாதையின் வாழ்வை அசுத்தமாக்கலாமா? கோடீஸ்வராகிய தங்களுடைய காதலுக்கு நான் தகுதியற்றவள்! கொஞ்சம் சிந்தனை செய்துபாருங்கள்!"

இதைக்கேட்டதும் இளவரசரின் கண்கள் சுருங்கி முகம் சோர்வுற்றது. "தேன் உண்ட வண்டுகள்! ஆம் அழகிய மலர்கள் விஷத்தேனைச் சொரிவதையொப்ப உனது செந்துவர் இதழ்கள் விஷம்போன்ற இனிய சொற்களைக் கொட்டுகின்றன. 'தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாரதியார் சொன்னார். என் காதுகளில் விஷத்தேன் பாய்கிறது! நான் பிழைக்கவா இது!" என்று ஆவேசத்துடன் பானுமதியின் கைகளைப் பிடிக்கத் தாவினார். அவள் துடிதுடித்துக் கொண்டு பின்னோக்கி நகர்ந்தாள்.

"எஜமானே தயவு செய்யுங்கள்! தயவு செய்யுங்கள்! என்னுடைய கற்பைக் காப்பது தங்கள் கடமை; என் வாழ்க்கையில் மாசு —"

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க.)

# வைத்திய நூற்கள்

கோயமுத்தூர் C. K. குமரசாமி பிள்ளை.

சித்தர்களின் தொகை தன்வந்திரி நிகண்டு 300ல் கிரேதாயுகத்தில் 500 பேர், திரேதாயுகத்தில் 1000பேர், துவாபரத்தில் 1500 பேர், கலியில் 3000 பேர்வரை தேரும், எனக் கூறப்பட்டுள்ளது.

ஆகவே இச்சித்தர்கள் அனைவரும் நம்போன்ற எனைய மக்களிடம் அருள் சுரந்து தாம் அடைந்த பேரின்ப நிலையை யாவரும் அடையும் வண்ணம் இயற்றிய நூல்கள் அளவற்றன. அவை பல பிரிவுகள். அவைகளில் மருத்துவம் (வைத்தியப் பகுதி) ஒன்று. அதில் சித்தர்கள் கூறிய உண்மைகளைக் காண பல சித்தர் நூற்களை நன்கு கற்று ஆராய வேண்டும். உண்மைக் கருத்துக்களைக் கண்டறிய வேண்டும். ஏனெனில் "நெஞ்சிலே இருப்பதொன்று வெளியிலே சொல்வதொன்று நெஞ்சிரக்கமில்லாத சித்தர் பாடல்" என சித்த நூற்களிலே காணப்படுகின்றது. மேலும் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" எனும் முதுமொழிப்படி தற்காலம்வரை அச்சகமேறி வெளிவந்துள்ள சித்தர் நூற்கள் பலவற்றிலும் தாள் ஒன்றுக்கு குறைந்தது 10, 15 எழுத்துப் பிழைகளிருக்கின்றன. மேலும் பதங்களே முன்பின் மாற்றப் பட்டிருக்கின்றன. பல பதங்கள் விடுபட்டிருக்கின்றன. பல புதிய சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பல முதற் பாடல்கள் நீக்கப்பட்டும், புதிய பாடல்கள் இயற்றிச் சேர்க்கப்பட்டுமிருக்கின்றன.

சித்தமருந்து நூல்களில் காணப்படும் குறைகள்யாவும் திருத்தப் பட்டும் புதிதாக வெளிவர வேண்டியது அவசியமாகும். இனி நான் இங்கு சொல்லவந்த சில ஆராய்ச்சிக் குறிப்புகளைச் சொல்லி எனது கட்டுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

புலிப்பாணி வைத்தியம் 500.

புலிப்பாணி, இவர் போகரது மாணுக்கர். இவர் பாடிய நூல்கள் மிகக்குறைவு. மற்ற சித்தர்கள் பாடிய பல நூல்களில் காணப்படும் முறைகளைத் திரட்டிச் சுருக்கமாகப் பாடியுள்ளார். இவர் கலியுகம் 205ம் ஆண்டில் புலிப்பாணி எனப்பேர்பெற்றவர். இவர் பாடிய இந்நூலில் பஞ்சீகரணம் எனும்மாத்திரை விவரம்.

'பாடினேன்.........உருக்கிவாரு' இதில் சொல்லப்பட்ட 5 சரக்குகளும் தீயைக்கண்ட அளவில் புகைந்து போகக்கூடியவை. ஆதலால் இவை புகைந்து ஓடாமல் கட்டி நிற்க வேறு பொருள் ஒன்றும் சேர்க்க வேண்டும். அதன் விவரம் இப்பாடலில் இல்லை. தங்கம் உருக்க ஆசாரி எவ்வாறு சிறிது வெங்காரம் கூட்டுகிருனே அதுபோல் இதற்கும் ஓர் உருக்குச் சரக்கு சேர்க்க வேண்டும். அது கெந்தியாகும். கெந்திக்கு சத்தி என்றும் நாதம் என்றும் வேறு பெயர்கள் உண்டு. ஒரு ஆண் பெண்ணைக் கண்டதும் மோகமுற்று மயங்கி அவள் வலையில் அகப்படுவது போல ஆண் தன்மை வாய்ந்த மேற்கூறிய சரக்குகள் பெண் தன்மையுடைய கெந்தியைக் கண்டதும் மயங்கிக் கட்டுண்டு போகிறது.

செய்பாகம்:— ஷை சரக்குகள் எல்லாம் கூடிய எடையளவு கெந்தியை முதலில் உருக்கி ஷை சரக்குகளின் பொடியை அதில்போட புகையாமல் உருகி ஆடும். அப்போது கட்டியாக ஒரு குழியில் வார்த்து எடுத்துக் கொள்ளவும். இது எனது அனுபவ முறையாகும்.

2. அ. பரிபூரணம் 400.

இந்நூலில் சொல்லப் பெற்ற சுடர்த் தைலம் என்ற முறையில் "தைலங்கேள்....வீரம் தாரம்" என்று காணப்படுகிறது. இங்கு வீரம் தாரம் என்றிருக்க வேண்டிய விடத்தில் "தானும்" என்று பிழையாக அச்சிடப் பட்டிருக்கின்றது. ஆதலால், தாரம் எனக்கூட்டிப் பொருள்படுத்தி மருந்து செய்து கொள்ளவும். இதுவும் எனது அனுபவ முறை.

3. அகஸ்தியர் வைத்தியரத்னச் சுருக்கம் 360,

இந்நூலில் முதல் மருந்து சித்தானந்த வைரவமாத்திரை. "சேரப்பாதிரி கடுகு சிவப்பு நாவி திறமான எரிச்சலொடு பொரிச்சலேழும்" என்று வருகிறது. இங்கு எரிச்சல் என்ற பதத்திற்கு கொடிவேலி, கெந்தகம், பெருங்காயம் என மூன்று பொருள்கள் உண்டு. இம்மருந்திற்கு இம்மூன்றில் எது சேர்ப்பதென்பது நன்கு யோசிக்கத்தக்கது. கொடிவேலியோ, கெந்தகமோ சேர்த்துப் பார்த்தால் கையாளு முறையில் "தாளப்பா தோஷமென்ற தெல்லாந் தீரும் தப்பாது கண்ணிலிடத் தீருந்தீரும்" என்றிருக்கின்றது. ஆதலால் இம்மருந்து கண்ணிலிடும் மருந்துமாகின்றது. நயனவிதி நூல்களிலும் மற்றும் கண்ணில் இடும் மருந்து முறைகள் பலவற்றிலும் கெந்தியோ கொடிவேலியோ சேர்ந்திருப்பதாய்த் தோன்றவில்லை. மேலும், கெந்தி கொடிவேலி இவ்விரு சரக்குகளும் கண்களைக் கெடுக்கக் கூடியவை. இதற்கு ஆதாரங்கள் பல உண்டு. பெருங்காயம் சேர்ந்த மருந்து கண்ணில் இடலாம். அகஸ்தியர் குழம்பு, சவுரியார் குழம்பு முதலியவற்றில் பெருங்காயம் சேருகின்றது. ஆதலால் இம்மாத்திரைக்கு எரிச்சல் என்ற இடத்தில் பெருங்காயம் கூட்டல் நன்று. இதே மருந்தை அனுபோக வைத்தியம் 8 காண்டத்தில் ஓர் இடத்தில் பெருங்காயம் கூட்டியும் மற்ரோர் இடத்தில் கெந்திகூட்டியும் செய்யக் குறித்திருப்பதைக் காணலாம். அம்முறைகளும் பிழை என்பது கவனித்தால் தெரியவரும்.

4. தன்வந்தரி வைத்தியக் காவியம் 1000.

இந்நூலில் முதலில் சில மருந்துகள் புலிப்பாணி 500ல் உள்ளவை. பாடல்கள் மட்டும் மாறுபட்டிருக்கின்றன. தவிர தன்வந்தரி காவியம் 1000 பாடவில்லை. அவர் பாடியது 800 தான். மற்ரென்று 1200. இந்நூல் 800ம் அல்ல 1200ம் அல்ல.

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.)

# சித்த மருந்துகள்.

வைத்தியபூபதி G. கண்ணுசாமி பிள்ளை.

சித்தர் வைத்திய முறையானது உலக விஞ்ஞான கலையின் உயிர்நாடி போன்றது. அவர்கள் சொல்லிய மருந்து செய்முறையோ பூதபௌதிக விஞ்ஞான ரஸாயன சாஸ்திரத்தின் அஸ்திவாரம் போல்வது. பஞ்சபூத தத்துவப்படி மக்களின் தேகத்தில் இருந்தியங்கும் பூதங்களின் மிகை குறைகளால் நிகழும் பிணிகளைப் போக்கும் நோக்குடனுக்கப் பெற்றதாகும்.

உலகத் தோற்றத்திற்காகியான சக்தி சிவாம்சப் பொருட் சேர்க்கையினலேயே சித்தர்கள் மருந்து முறை வகுத்துள்ளார்கள். சித்த நூல்கள் விவரிக்கும் 4448 நோய்க்கும் காரண பூதம் சத்தி சிவப்பொருளின் கூடுதல் குறைவாதலின், சக்தியாகிய நீர்ப் பொருளொன்றே சகல மருந்துகளுக்கும் உயிராகும். அதனோடுறவாக வந்து உண்மை தெளிவித்தழுக்கறுக்கும் சிவப் பொருளும் சேர்ந்தால் யாதும் வல்லதாய் இயங்கும். அவை அணுப்பிரிந்தாலு மியங்காது. ஆதலின் நீர் உறைந்த உப்பும் சுண்ணம்பும் சித்த மருந்துக் காதியாகும். சித்தமருந்துகளுக்கு அம்மாதிரி உருவாக்கப்பெற்ற தொரு வஸ்துவையே 'முப்பு' என்று கூறியுள்ளார்கள். அதை விடுத்துச் செய்யும் மருந்துகள் உப்பில்லா உணவுபோல் ஆகின்றன.

அப்படிப்பட்ட மூலவஸ்துவைச் சித்தர்கள் ஒளித்து மறைத்துக் கூறியுள்ளார்களென்று, வாய்கூசாமலும் அவர்களின் சிவசகாயமான அன்பையுமின்ன தென்றறியாமலும், மனம் போனபடி பேசுகிறார்கள். சிலர் வைத்திய சூத்திர ஆதி இலக்கியச் செய்யுள்களை இதிகாசம், சோதிடம், நாடகம், இசை முதலியதற்குரிய இலக்கணங்களால் உணரச் செய்து குழப்பி வருகிறார்கள். அந்நாளைய வழக்கச் சொற்கள் தேய்ந்தொழிந்த இக்காலத்தில் பல பாஷையினாலும், மொழிபெயர்க்கப்பட்டும், தற்காலத் தமிழால் வரையப்பட்டு மிருக்கிறது.

இந்தக் காரணங்களையும் சிந்தித்தால் உண்மை விளங்கும். உப்பும் சுண்ணம்புமே முக்கியமாகும். உப்பும் புளியுமே குழம்பு ரஸமாகும். தீயும் நீருமே சோறு சமைக்கும். ஆதலின், ஆண் பெண் அல்லது காரசாரம் உப்பு புளி, சக்தி சிவம், சுரோணித சுக்கிலம், விந்து நாதம், கோசம் பீசம் என்ற பெயர்களால் கூறப்படுகிறது. இதில் மேலே கூறிய முப்பு என்பதை பலவிதமாகக் கூறியிருக்கிறார்கள்.

முதல் பிண்டம், தலைப்பிண்டமென்றெல்லாம் கூறியுள்ளதால் அநேக வைத்தியர்கள் மனம்போனபடி தாறுமாறாக அர்த்தங்கொண்டு அடாத காரியங்களும் செய்ய முற்படுகிறார்கள். சிலர் மூலப்புளி அமுரியென்பதை மல மூத்திரங்களை யெடுத்து வராகங்களுடன் போட்டியிட்டு மல மூத்திர டீ பார்ட்டி டின்னர் பார்ட்டி நடத்துகிறார்கள் இம்மாதிரி காரியங்களாலேயே உன்னதமான சித்த வைத்திய பெருமை குன்றுகிறது.

முப்பூ என்பது பல ஆயிரம் வகையாகச் செய்யலாம். வயித்திய முப்பு, மருந்துக்கு உப்பு, வாதமுப்பு, உலோகமாரண உப்பு, யோகமுப்பு, பிறப் பிறப்பொழிக்கும் யோகமுப்பு, காயகல்பம் இவை ஒவ்வொன்றும் தொந்தம் கோடி தொகை கோடியாகும். வைத்தியமுப்பு செய்வதில் பல முறைகளுண்டு. அதில் சிலவற்றை நமது சித்த நூலிலிருந்து சேகரித்ததை அனுப்புகிறோம். இலகுவாக மருந்து செய்வதற்கு உயர்ந்ததும் அனுபவமானதுமான ஒரு பக்குவமாவது காரசார முறை. வெடியுப்புத் திராவகத்தில் நல்ல உப்பு பற்பமும் ஒரு பங்கு ரஸமும் கால்பங்கு தங்கமும் கரைத்து அதனால் அரைத்து எரிப்பது, அல்லது புடமிடுவது சுலபம்.

கடையில் விற்கும் வெடியுப்புத் திராவகத்திலும் செய்யலாம். ஒரு பவுண்டு திராவகத்தில் ஒரு பலம் சுத்தமான வாலை ரஸமும் கால் பலம் தங்கமும் சேர்த்துக் கரைந்தபின் சாதாரண உப்பை எப்படியாவது சுண்ணம்புத் தெளிவிலாவது அரைத்து 4, 5 புடமிட்டு எடுத்த காரமான உப்பு பலம் 1, கல்சுண்ணம்பு பலம் 1 கலந்து அரக்குக்குப்பி அல்லது ஜாடியில் வைத்துக்கொண்டு அதனால் தாளகம் செந்தகம் ரஸம் முதலிய எந்த மருந்தையும் அரைத்து கிரமப்படி ஜாக்கிரதையுடன் புடமிட்டுப் பின்பு எந்த மூலிகைச் சாறு விட்டேனும் அரைத்து நாலுபுடம் போட்டுக் கொள்ளலாம். புதைப்பதைக்காட்டிலும் குப்பியிலடைத்து (காசிக்குப்பி) 4, 6 சாமம் எரித்து எடுத்து பின்பு மேற்கண்ட மாதிரி 4 புடம் போட்டுக் கொண்டால் காரசாரத்துடன் மருந்துகள் நன்றாயிருக்கும். அளவில் சிறுகக்கொடுக்கவேண்டும். அப்படி புடமிடுவதில் முதலில் கும்பிடு சிப்பி செயநீர் சேர்த்தரைப்பது நல்லது. கும்பிடுசிப்பிகளை உயிருடன் சேகரித்துச் சிறிது வெங்காரமும் சிறிது வெங்காரத்துக்கு 10-ல் 1 பங்கு வீரமும்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றியும் இந்நூலின் பின்னால் சுமார் 200 பாட்டுகள் வரை யூகிமுனி வைத்திய சிந்தாமணியைச் சேர்ந்தவை. பாடல்கள் முழுதும் அதிலுள்ளவையே. மத்தியிலுள்ள பாடல்கள் தந்வந்திரி 1200 நடுபாகமாக இருக்கலாம். நான் 1200 பார்த்ததில்லை. 800 என்னிடம் உள்ளது இன்னும் அது அச்சாகவில்லை.

5. அ. பூரணம் 205.

இந்நூலில் தங்கபற்பம் செய்முறையில் பனிதாங்கிமூலி என்றிருக்கின்றது. அம்மூலி பனித்துளியை மிக்க கொடிய வேனிற்காலத்திலும் தாங்கியிருத்தல் வேண்டும். எங்கள் ஊர்களில் ஷெ மூலிகைக்கு நீர்க்குடத்தான் எனப்பெயர் அதுவே பனிதாங்கிமூலி. மற்றபடி அறுகம் புல்லுமல்ல மூங்கிலையுமல்ல. தவிர இந்நூலில் சொல்லப்பட்ட பற்ப செந்தூரங்களாகும் எனக் குறிக்கப்பட்டுள்ளன. அப்படிச் செய்தாலும் முடிவதில்லை. இந்நூலின் சுருக்கம் 25ல் சொல்லியபடி குரு முடித்தோ அல்லது அ. பின்னால் 80 குறிப்பிட்டபடி இந்நூலின் குருமுடித்தோ முடித்தால் ஆகும். இதுவும் நான் கையாளு முறையாம்.

## "உதயசங்கரன்."

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

"மாசாவது மறுவாவது? எப்படி முடியும்! அழகின் பூர்த்தியாகிய உன் வாழ்க்கையைவிட யாருடைய வாழ்க்கை உயர்ந்தது. எல்லாவற்றிற்கும் நானே ஜவாப்தாரி!" என்று அவளுடைய கைகளைப்பற்றி முத்தமிட முயன்றார். பானுமதி கோபத்துடன் கைகளை உதறிக்கொண்டு, "ஐயோ! எனது குலதர்மம் கெட்டுப்போகும் போல் தோன்றுகிறதே! ஏ! தெய்வமே உனக்குக் கண்ணில்லையா? சுவாமி தாங்கள் ஜாதியிலும் பணத்திலும் படிப்பிலும் உயர்ந்திருந்தும் சாத்தியமற்ற காரியங்களைச் செய்யலாமா?" என்று தேம்பித் தேம்பி அழுதாள்

"பானு நீ கல்நெஞ்சம் படைத்தவள்! என் மனதில் பொங்குகிற அன்புக்கு ஈஸ்வரனாயிருந்தால் இந்த உலகத்தையே தானம் செய்திருப்பார். நீயோ ஒரு வார்த்தை சொல்ல இப்படி இறுக்கிப் பிடிக்கிறாய்! என் ஜாதியும் செல்வமும் படிப்பும் புகழும் உனது காதலைவிடப் பெரியவைகளா? தெய்வீகக் காதலுக்கு எவ்வித பேதமுங் கிடையாது. நான் உன்னை உண்மையாகவே காதலிக்கிறேன். அப்படியிருக்கும்போது உன் வாழ்க்கையில் குற்றம் ஏற்படுவது எப்படி?" என்று மனம் இளகியவராய்க் கூறினார். பானுமதி இதைக் கேட்டுத் திகைப்படைந்தாள். இளவரசருக்கு பைத்தியம் தலைக்கேறிவிட்டது. இனி அவரை எப்படித் தப்பிச் செல்வதென்று அவளுக்குப் புலப்படவில்லை. மானம் இழந்தபின் உயிர்வாழ்வதைக் காட்டிலும் மானம் உள்ளபோதே உயிரை விடுவது மேல். இவர் செய்தியை சுந்தரத்தண்ணியிடம் சொல்லலாகுமா? அப்படிச் சொல்லிய போதிலும் அதை அவள் காதில் வாங்கிக்கொள்ளுவாளா? என்பது ஒன்றும் புரியாமல் அவள் தவித்தாள். "வேறு எந்த தந்திரத்தாலும் இவரிடமிருந்து தப்பிக்க முடியாது. இனி தற்கொலையைத் தவிர மானத்தைக் காத்துக்கொள்ள வழியில்லை." என்று தன் மனத்தைத் திடம் செய்துகொண்டு கையிலிருந்த கத்தியினால் மார்பில் குத்திக்கொள்ள சரேலென்று ஓங்கினாள். இளவரசர் அதைக் கண்டதும் மனம் பதறி சடக்கென்று அவள் கையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு "ஹா! ஹா! வேண்டாம்! வேண்டாம்! விபரீதமான காரியம் ஒன்றும் வேண்டாம்" என்று அலறினார்.

"எஜமானே, தடுக்காதீர்கள்! என் தைரியத்தைத் தடைசெய்யாதீர்கள்! நான் இனிமேல் இருந்தால் வீணாய் அவஸ்தைப்பட்டு அழிய வேண்டியதுதான்" என்று கத்தியுடன் கையைத்திமிறினாள். இளவரசர் பலாத்காரமாக கத்தியைப் பறித்துக் கொண்டு, "பானு! எவ்விதவருத்தமுங் கொள்ள வேண்டாம்! நான் உன்னை கஷ்டத்திற் குள்ளாக்குவேனென்று கனவிலும் கருதவேண்டாம்! நீ உயிருடன் இருந்தால் போதும்! நீ வீட்டுக்குப்போ! நான் தொந்திரவு கொடுக்கவில்லை!" என்று பரிதாபத்துடன் உரைத்தார். பானுமதி இலைகளை அள்ளிக்கொண்டு துரிதமாக வீட்டை நோக்கிச் சென்றாள். இளவரசர் மனம் ஏங்கியவராகத் தோட்டத்தைவிட்டு நீங்கி கொட்டகையில் கிடந்த நாற்காலியில் தொப்பென்று சாய்ந்தார்.

* * * *

அன்றிரவு உதயசங்கரர் சாப்பாடு வேண்டாமென்று தெரிவித்துவிட்டார். முகத்தில் களைகுன்றி உடம்பு தளர்ந்து போயிருந்தது. ஹிருதயத்தில் நிறைந்திருந்த சஞ்சலம் கண்ணாடியில் தெரிவதைப்போல முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. இளவரசரின் சோர்வைக் கண்டு தனபால முதலியாரும் சுந்தரத்தண்ணியும் கவலையடைந்தனர். ஈஸிச்சேரில் சாய்ந்து கண்ணை மூடிக் கொண்டிருந்த இளவரசரை தனபால முதலியார் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். தனபால முதலியார் உட்கார்ந்திருந்த சோபாவைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த சுந்தரத்தண்ணியும் இளவரசரைக் கவனித்துப் பார்த்தாள்.

"வயிறு சரியாக இல்லையா தம்பி!" என்றார் தனபால முதலியார்.

"ஆம்!" என்று தலையை அசைத்தார் இளவரசர்.

"இஞ்சி மொரபா கொஞ்சம் கொண்டுவரட்டுமா?" என்றாள் சுந்தரத்தண்ணி.

"வயிற்றுக் கோளாறுக்கு இஞ்சி மொரபா என்ன செய்யும்? 'டைஜெஸ்டிங் மிக்ஸர்' ஒரு அவுன்சு கொண்டுவரச் சொல்!" என்றார் தனபால முதலியார்.

"மாமா! ஒன்றும் வேண்டாம்! சும்மா இருங்கள்" என்றார் இளவரசர்.

பதில் கிடைத்த தொனியைப் பார்த்ததும் மேற்கொண்டு உபசாரம் செய்ய இருவரும் பயந்துபோயினர். சிறிதுநேரம் மௌனமாகவே கழிந்து கொண்டிருந்தது. ஐந்து நிமிஷம் சென்றதும் இளவரசர் சரேலென்று எழுந்து, "மாமா நான் படுக்கைக்குப் போகிறேன். அயர்ந்து தூங்கினால் உடம்பு சௌகரியத்துக்கு வரும் என்று நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மாடியை நோக்கி விரைந்து சென்றார். அவர் சென்றபிறகு தனபால முதலியார் தன் மனைவியை நோக்கி,

"சுந்தரம், தம்பியின் முகம் தேஜஸ் குறைந்து கவலைக்குறியுடன் தோன்றுகிறது. என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை!" என்றார்.

"வந்தது முதற்கொண்டே முகம் சரியாயில்லை. அன்றைக்கு ஸ்நானம் செய்துகொண்டிருந்தபோது உடம்புக்கு என்ன என்று விசாரித்தேன். ரொம்ப கோபம் வந்துவிட்டது!" என்றாள் சுந்தரம்.

"அதுதான் வழக்கமாச்சே."

"திலகவதி அன்றைக்கு குற்றலாகப் பேசினாளே, அதனால் ஏதாவது வருத்தமுண்டாயிருக்குமோ!"

"ஆமாம். அந்தக் கழுதை இன்னது பேசினால் இன்னது விளையும் என்று தெரியாமல் உளறிக்கொட்டுகிறது. என்ன செய்கிறது! குட்டி குலைத்து நாய் தலையில் வைத்தது போல் இருக்கிறது."

"இருந்தாலும் தம்பிக்கு இந்த மாதிரி கோபம் ஆகாது!"

"போடீ போ; நீ பெண் வளர்க்கிற லக்ஷணம். பெண்களுக்கு வாய்த்துடுக்கு ஆகுமா?"

"இங்கிலீஷ் படிக்க வைக்கணுமென்று படிக்க வைச்சீர்கள்! எல்லாம் அந்த பாஷனில்தானே வரும். அதற்கு நான் என்ன செய்யட்டும்! அவனுந்தான் இங்கிலீஷ் படிச்சவன். பெண்களும் ஆண்களுக்கு சமமாக நடக்க வேணும் என்கிறவனாச்சே, அவள் பேசியதை குற்றமாக எடுக்கலாமா?"

இதற்குத் தனபால முதலியார் ஒன்றும் பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தார்.

## சித்த வைத்தியம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை உபதேசமும் மந்திரமும் மூலன் தேகத்தில் வந்தபின் செய்தது மூவாயிரம் தமிழ் ஒன்றே.

ஆதலின், "திருமூலர் எண்ணாயிரம்" "திருமூலர் கருக்கிடை அறுநூறு" என்ற நூல்கள் எல்லாம் அவர் பெயர் தரித்த பிற்காலத்துச் சித்தர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவரால் பாடப்பட்டவையாகும்.

அகத்தியர் மாணாக்கர் தேரையர் வேறு, தருமசவுமியர் மாணாக்கர் தேரையர் வேறு. அகத்தியர் மாணாக்கர் தேரையர் பரிகரிப்பதில் (Surgeory) கைதேர்ந்தவர். மண்டையை அறுத்து மூளையைச் சரிப்படுத்துவதிலும் கைதேர்ந்தவர்.

போகர் நூல்கள்.

1. வைத்தியம் ஏழாயிரம்.
2. யோகம் எழுநூறு
3. நிகண்டு பதினேழாயிரம்
4. போகர் திருமந்திரம்

புலிப்பாணி நூல்கள்.

1. வைத்தியம் ஐந்நூறு
2. சாவாத்திரட்டு நூறு
3. சிதம்பரம் இருபத்தைந்து
4. பலதிரட்டு நூறு

கோங்கணவர் நூல்கள்.

1. கடைக்காண்டம்
2. திரிகாண்டம்
3. கொங்கணவர் ஞானம்
4. குணவாகடம்

சித்தர் இடைக்காடர் வேறு. கடைச்சங்கப்புலவர் இடைக்காடர் வேறு. சித்தர் இடைக்காடருடைய மாணாக்கர் கமலமுனி.

கம்மாளர்.

1. "கமலமுனி முந்நூறு"
2. கமலமுனி இரேகை சாத்திரம்

இவர் செய்த நூல்கள்

சட்டைமுனி சேணிய மரபினர் இவர் செய்தவை:—

1. சடாட்சரக் கோவை
2. கல்பம் நூறு
3. ஞானம் நூறு
4. வாத நிகண்டு
5. சட்டைமுனி ஆயிரத்து இருநூறு
6. நவரத்தின வைப்பு

மச்சமுனி செம்படவர். இவர் செய்தவை:—

1. திராவகம் எண்ணூறு
2. வைத்தியம் எண்ணூறு

உரோமமுனி புசுண்டர் குமாரர் சட்டைமுனி காலத்தவர். இவர் செய்தவை:—

1. உரோமமுனி நூறு
2. ,, ஐந்நூறு
3. ,, பஞ்சபட்சி

யூகிமுனி, இவர் காக்கையை வெண்ணிற மாக்கினவர். வீரச்சுன்னம் செய்தவர், "வைத்திய சிந்தாமணி" என்னும் நூல் இயற்றியுள்ளார்.

தேரையர் II செய்தவை:—

1. நோயணுகா விதி
2. நீர்க்குறி நூல்
3. நெய்க்குறி நூல்
4. பதார்த்தகுண சிந்தாமணி
5. தயில வர்க்கச் சுருக்கம்.
6. சிகிச்சை ஆயிரம்
7. சிகாமணி வெண்பா
8. மருத்துப்பாரதம் முதலியன

தன்வந்திரி என்பார் ஆரியநாட்டு ஆயுர்வேத சங்கத்தைச் சார்ந்தவர் அல்ல. அவர் வேறு, இவர் வேறு. தமிழ்நாட்டு சித்தர் சங்கத்தைச் சார்ந்த தன்வந்திரிதான் புள்ளிருக்கும் வேளூரில் சமாது எய்தியவர். ஆயுள்வேத தன்வந்திரி அல்ல. இவர் செய்த நூல்கள்:—

1. வைத்திய சிந்தாமணி
2. கலைஞானம்
3. சிமிட்டு இரத்தினச் சுருக்கம்
4. தன்வந்திரி நிகண்டு

கஞ்சமலை சித்தர் கொங்குநாட்டுக் கஞ்சமலையில் சமாதி எய்தினர்.

பாம்பாட்டிச் சித்தர் பாண்டிநாட்டார் சட்டைமுனி சீடர். கொங்குநாட்டு மருதமலையில் சமாதி எய்தியுள்ளார்.

இவர் செய்த நூல்.— "சித்தாரூடம்" அகப்பேய், குதம்பை, சிவவாக்கியர் முதலியோர்கள் பாடல்களும் உள.

## சித்த வைத்தியம்.

இதுவரை சித்தர்களைப்பற்றி ஒரு சிறிது கூறினோம். இனி அவர்கள் மருத்துவ முறைக்குச் செய்துள்ள தொண்டைப்பற்றி பலர் கூற இருக்கின்றார்கள். ஆதலால் அம்முறையைப் பற்றி ஒன்றும் தெரியாத நான் கூறுவது மிகையாகும்.

முக்கியமாக நான் தெரிந்துகொண்ட அளவில் சித்தர்கள் எல்லாம் 'முப்பு' முடித்துவைத்துக் கொண்டு அதைக்கொண்டு எல்லா நோய்களையும் நீக்கியும், காயகற்பத்தினால் உடம்பை அழியா நிலையில் இருக்கச் செய்தும், எது அவத்தைப்பட்டாலும் தங்கள் நிலை மாறாமல் முத்தி ஒன்றையே நாடி இருந்தார்கள் என்றும் அறிகிறோம்.

முப்பு என்றாலும் குரு என்றாலும் ஒன்றே. அந்த முறை இப்போது யாருக்குமே தெரியாது. ஆதலின் முப்பு என்பதைப்பற்றி நாம் சிந்திக்காமல் ஏனைய சாறு, இரசம், சூரணம், கசாயம் முதலியவைகளினால் நோய்களை நீக்க முயலுவோமாக.

கடவுளுடைய படைப்பு கூர்ந்து நோக்குவோர்க்கு அதிசயத்தை விளைவிக்கும். ஒவ்வொரு மூலிகைகளும் "என்னை இன்ன நோய்க்கு உபயோகியுங்கள்" என்று கூறுவதுபோல இருக்கும். உதாரணமாக வாழைப்பூ, களிச்சக்காய், அம்மான் பச்சரிசி, ஊண் ஆம்கொடி முதலியன பாருங்கள்!

ஆதலின், அன்பர்களே! நம் நாட்டு சித்த வைத்தியம் தழைத்து ஓங்க வேண்டுவன செய்ய வேணுமென்று உங்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய சொற்பொழிவை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

## ஏஜண்டுகள் தேவை.

—:0:—

எல்லா இடங்களிலும் அகஸ்தியனை விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை! தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்! விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

அகஸ்தியன் ஆபீஸ்,

திருத்துறைப்பூண்டி.

வியாபார விருத்திக்குச் சிறந்த
நண்பன்
'அகஸ்தியன்'

## இருமல் இளைப்பு தீர்ந்து விட்டது!

பழனி R. M. K. **தாளக பஸ்பம்**

### இருமலுக்கு கைகண்ட மருந்து

நீங்கள் இருமலினால் என்ன கஷ்டப்பட்டாலும் சரி! எத்தனையோ மருந்துகள் சாப்பிட்டு இருமல் தீராதிருந்தாலும் சரி, உங்கள் இருமலை 6 நாளில் கண்டிப்பாய் நிறுத்திவிடும். அது எத்தனை வருத்திய ரோகமானாலும் சரி பறந்துவிடும். சீதளம், மழை, பனி, காலங்களில் வரும் ஈளை, இருமல், இளைப்பு, கக்கல், மந்தாரகாசம், ரத்தகாசம், கஷ்டசுவாசம், கோழை கபக்கட்டு, அதனால் மார்பு வலி, விலா வலி, முள்ளந்தண்டு வலி, சிராய்ப்பீனிசம், மூக்கில் ஜலம் ஒழுகுதல், தும்மல், வயிறு உப்புசம், தலைவலி, காதுகுடைதல், ஜுரம், மூச்சு திணறுதல், நெஞ்சில் தொண்டையில் கர்முர் என்ற சப்தம், பூனைபோல் கத்துதல், கூவுதல், நுரையீரல் தாபனம் முதலியவை இதில் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்ட அருமையான மருந்து.

25 நாள் தாளக பஸ்பம். அனுபானம் தாளிசபத்திரி சூரணத்துடன் விலை ரூ. 10.

தபால் சார்ஜ் அணா. 10. 25 நாள் மருந்திற்கு குறைந்து கொடுக்கப்படமாட்டாது.

வைத்திய ஆசிரியர், **ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**

**சித்த வைத்தியசாலை, பழனி.**

தந்தி விலாசம்: "வேலுசாமி" பழனி.


### "சித்த மருந்துகள்"

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து பொடித்துத்தூவி பேஸனில் வைத்தால் நீர் வடியும். அதுதான் சிப்பி ஜெயநீர் என்பதில் ஒரு விதம்.

### இரஸ பற்பம்.

(இது ஒரு நல்ல உயர்ந்த முறை)

லிங்கத்திலெடுத்த வாலை ரஸம் தேவையான அளவு எடுத்துக்கொள். வேப்பிலையை நிரம்ப இடித்து 6 மரக்கால் பிடிக்கும் மண்பானைகளில் போட்டு இரண்டு மரக்கால் தண்ணீர் விட்டு ரஸமும் அதில் போட்டு சரி பாதி நீர் வற்றும்படி எரித்து ஆறின பின் இலையை பிழிந்து எடுத்துவிட்டு ரஸத்தையும் கஷாயத்தையும் மற்றொரு சாலில் விட்டு எரித்து முன்போல் எடுத்து மற்றொரு சாலில் மாற்றி இப்படி 5, 6, 7 முறை செய்து இலைகளைப் பிழிந்தெடுத்துவிட்டு அப்படியே வைத்து எரித்து நன்றாய் சுண்டின பின் வேப்பக் கஷாயத்தினால் சுத்த வெள்ளைத்துணியில் விட்டுப் பிழிந்தெடுத்த ரஸத்தை தண்ணீரில் கரைத்து வடித்து எடுத்த தெளிவைக்காய்ச்சி எடுத்த உப்பும் செங்கல்மாவும் கலந்து பானையில் அழுத்தி (3-விரற்கிடை) அதில் மேற்படி ரசத்தை வைத்து மேல் பானை மூடி சீலைமண் 6 சாமம் எரித்து ஆறியபின் எடுத்து பதங்கத்தை எடுத்துக்கொண்டு அடியிலுள்ளதை தண்ணீரில் கரைத்து அதிலுள்ள ரஸத்தையும் எடுத்துக்கொண்டு தண்ணீரில் சிறிது உப்பு சேர்த்து எரித்து இடித்து முன்போல் ரஸம் வைத்து எரிப்பது. இப்படி எழுதடவை எரித்து எடுத்தால் நிறம் சிறிது கம்மலான வெண்ணிறமா யிருந்தாலும், சகல வியாதிக்கும் நிச்சய குணமளிக்கும். உயர்ந்த மருந்து இதில் இயன்றளவு தங்க பற்பமும் சேர்த்துக்கொண்டால் தேவ சஞ்சீவி என்றே சொல்லலாம். நோய்க்குரிய அனுபானங்களிலும் சட்டப்படி பெண், புளி, புகை, நீக்கியும் நல்ல பத்தியமுறைப்படி கொடுத்தால் தீராத நோயில்லை, என்பது அனுபவம். மேகவாதம், சூலைகுன்மம், இரத்தபித்தம், எரிகுன்மம், வாதபித்த கப சகலநோய்க்கும் விருதுபோன்றது

### மெழுகு மருந்துகள்.

எந்த மெழுகானாலும் அதில் சிறிது தங்கம் சேரவிட்டாலும், பசுவின் வெண்ணெய் கலந்து சூடன் கொளுத்திய தீயில் வாட்டி எடுக்காத மெழுகு எதுவானாலும் 48 நாள் பூமி அல்லது தானியக் குதிருக்குள் புதைத்து வைக்காவிட்டாலும் அந்த மெழுகு பிரயோசனமில்லை. குணமில்லை. கோளாறு செய்யும்.

கனகலிங்ககற்பூர மெழுகு மிகவும் நல்ல மருந்து. உயர்தர மருந்து செய்ய முயலுவோர் மாசி பங்குனி சித்திரை மாசத்தில் பூக்கும் பூநீறும் பெய்யும் பனிநீரும் அங்குள்ள சுக்கான் கல்லும் சேகரிக்காவிடில் பயனில்லை. (அகத்தியமுறை)

---

### பிரபல திருமணம்

சென்ற 22-4-42 புதன்கிழமை திருவாரூர் வைத்யபூபதி Dr. G. கண்ணுசாமி பிள்ளை அவர்கள் குமாரி ஸ்ரீமதி கமலாவுக்கும் நாகை திரு S. தியாகராஜ பிள்ளை அவர்கள் குமாரர் திருவாளர் ராஜமாணிக்கம் பிள்ளை M. D. (s) அவர்களுக்கும் திருமணம் இனிது நடந்தேறியது. இத்தம்பதிகள் நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் நிறையப்பெற்று இல்லறவாழ்க்கை நடத்தவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

Edited, Printed and Published by G. DAKSHNAMOORTHI at his 'Victoria press', TIRUTURAIPUNDI.